செ.வெ.எண்:01 நாள்:01.08.2021

**நாமக்கல் மாவட்டம்**

**கொரோனா தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

-----

கடந்த 2 மாதங்களுக்கு முன்பாக கொரோனா நோய்த்தொற்று மிகவும் அதிகமாக இருந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மருத்துவமனைகளிலும் கூடுதல் படுக்கை வசதி, ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள், வெளிநாடுகள், வெளி மாநிலங்களிலிருந்து ஆக்சிஜன் சிலிண்டர்கள் மற்றும் ஆக்சிஜன் வரவழைத்தும், கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கையாக ஊரடங்கு உத்தரவை அமல்படுத்தியும், நோய்த்தொற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்கள். கடந்த சில நாட்களாக கொரோனா நோய்த்தொற்றால் பிற மாநிலங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்காத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையிலும், தற்போது உள்ள அளவிலிருந்து கொரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்தும் வகையிலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தொடர் பிரச்சார இயக்கத்தை 31.07.2021 அன்று துவக்கி வைத்து, கொரோனா விழிப்புணர்வு குறும்பட தகட்டினை வெளியிட்டார்கள்.

மேலும், மாவட்டந்தோறும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கொரோனா தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, 01.08.2021 முதல் 07.08.2021 வரை ஒரு வார காலத்திற்கு தினந்தோறும் பல்வேறு துறைகளின் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைந்து நடத்திடவும், துண்டுப் பிரசுரங்கள், சிற்றேடுகள், டுவிட்டர், முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வளைதளங்களிலும், தொலைகாட்சி நேர்காணல்களிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில் இன்று (01.08.2021) நாமக்கல் தெற்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, இந்திய மருத்துவ சங்கம் மற்றும் நாமக்கல் அனைத்து ரோட்டரி சங்கங்களின் சார்பில், கொரோனா தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, கொரோனா தடுப்பு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி துவக்க நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எ.கே.பி.சின்ராஜ் அவர்கள், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.பெ.ராமலிங்கம் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், “கொரோனா ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவும் என்பதை நான் அறிவேன். அதனை தவிர்க்க, பொது இடங்களுக்கு செல்லும் போது கண்டிப்பாக முககவசம் அணிவேன். மற்றவர்களிடமிருந்து குறைந்த பட்சம் 8 அடி இடைவெளியை கடைப்பிடிப்பேன். சோப்பும் தண்ணீரும் கொண்டு அடிக்கடி கைகளை சுத்தம் செய்வேன். நான் கொரோனா தடுப்பூசி எடுத்துக்கொள்வதோடு மற்றவர்களையும் தடுப்பூசி எடுத்துக்கொள்ள ஊக்கப்படுத்துவேன். இந்த உயிர்கொல்லி வைரஸ் பரவுவதை தடுக்க நான் அரசின் அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் கடைப்பிடிப்பேன். கொரோனா மூன்றாம் அலையினை தடுக்க எப்பொழுதும் விழிப்புடன் இருப்பேன் என்று உறுதி கூறுகிறேன்” என்று உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்த சைக்கிள் பேரணியானது, தெற்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி, மோகனூர் சாலை, பரமத்தி சாலை, உழவர் சந்தை, கோட்டை ரோடு, சேலம் சாலை வழியாக சேலம் சாலை முருகன் கோவில் அருகில் வந்தடைந்தது. இந்த பேரணியில் கலந்துகொண்டோர் முகக்கவசம் அணிவோம், வரும் முன் காப்போம், கொரோனாவை வெல்வோம், அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவமனை செல்வோம், சோப்பினால் அடிக்கடி கைகளை கழுவுவோம், தனிமனித இடைவெளியை கட்டாயம் கடைப்பிடிப்போம், அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்வோம் என்று கொரோனா என்று கொரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தி முழக்கமிட்டு சென்றனர்.

பின்னர், நாமக்கல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், வாகன ஓட்டிகள் மற்றும் நடைப்பயிற்சி மேற்கொண்டவர்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இப்பேரணியில் நன்கொடையாளர் திரு.கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.எஸ்.சோமசுந்தரம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன், நாமக்கல் நகராட்சி ஆணையாளர் திரு.பு.பொன்னம்பலம், தேசிய நலக்குழும தொடர்பு அலுவலர் மரு.பெ.ரங்கநாதன், ரெட் கிராஸ் ஒருங்கிணைப்பாளர் திரு.இராஜேஷ் கண்ணன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**